

19 Apr 2019
Tamil Malar, Malaysia

Author: null • Section: NEWS • Page: 13 • Printed size: 837.00cm² • Region: KL
Market: Malaysia • Photo: Full Color • ASR: MYR 4,302.00 • Item ID: MY0035764473

isentia.mediaportal
Provided for client's internal research purposes only. May not be further copied, distributed, sold or published in any form without the prior consent of the copyright owner.



# சூப்பர் மைண்ட் டைனமிக்கின் சாதனை விழாவிற்கு தொடர்ந்து டோக்கியோ மெரின் ஆதரவு வழங்கும்





ரவாங், ஏப். 19–

சூப்பர் மைண்ட் டைனமிக் கல்வி மையத்தின் சாதனை விழாவுக்கு தொடர்ந்து டோக்கியோ மெரின் காப்புறுதி நிறுவனம் முழு ஆதரவு வழங்கும் என்று அதன் நிர்வாகியான ஆ.சு.மலையரசன் தெரிவித்தார்.

இந்த நாட்டில் இருக்கின்ற 8 விழுக்காட்டு இந்திய சமுதாயத்தில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் காப்புறுதி இல்லாமலேயே இருக்கிறார்கள். இது ஒரு கவலைக்குரிய தகவல் என்று அவர் தெரிவித்தார்.

நாம் வாங்கும் வீட்டிற்கு காப்புறுதி என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதே போல் வாகனத்திற்கும் காப்புறுதி கட்டாயமான ஒன்றாக இருக்கிறது. ஆனால், உயிருள்ள மனிதர்களுக்கு மட்டும் காப்புறுதி இல்லாத நிலை, இது வருத்தத்திற்குரிய ஒன்றாகும். மக்களுக்கு காப்புறுதியின் மகத்துவம் இன்னும் தெரியவில்லை என்றும் மலையரசன் கூறினார்.

22 ஆண்டுகளாக சூப்பர் மைண்ட் டைனமிக் கல்வி மையம் சாதனை விழாவை நடத்தி வந்தது. இதனிடையே, கடந்த ஆண்டு இந்த சாதனை விழாவை நடத்துவதற்கு நிதி நெருக்கடி ஏற்பட்டிருந்தது. அப்போது முழு செலவையும் தாம் ஏற்றுக் கொள்வதாக ஆ.சு.மலையரசன் அறிவித்திருந்தார்.

அவரின் ஆதரவோடு இப்போது இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது என்றும் நாடறிந்த தன்முனைப்புப் பேச்சாளர் ஆசிரியர் மு.கணேசன் தெரிவித்தார்.





அதோடு மட்டுமின்றி, இனி வரும் காலங்களிலும் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுவதற்கு ஆ.சு.மலையரசன் ஆதரவு வழங்குவேன் என்று கூறியிருப்பது மேலும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும் என்றும் அவர் சொன்னார்.

கல்வியில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்காக ஆண்டுதோறும் இந்த ஊக்குவிப்பு நிகழ்ச்சியை சூப்பர் மைண்ட் டைனமிக் கல்வி மையம் தவறாமல் நடத்தி வருகிறது. இது மாணவர்களுக்கு மிகப் பெரிய உந்து சக்தியை வழங்கும் நிகழ்ச்சியாக விளங்குகிறது என்று அவர் சொன்னார்.

தற்போது சூப்பர் மைண்ட் டைனமிக்கோடு மேலும் ஒரு சக்தியாக இணைந்திருக்கும் டோக்கியோ மெரின் நிறுவனத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் கூறினார்.

இந்த நிகழ்ச்சிக்கு ரவாங் வட்டார தொழிலதிபர் டத்தோஸ்ரீ ஜீவானந்தம், மஇகா சிலாங்கூர் மாநிலத் தலைவர் எம்.பி.ராஜா, மலேசிய தெலுங்கு சங்கத்தின் தேசியத் தலைவர் டத்தோ டாக்டர் அக்ஷயக்குமார், மலேசிய தமிழ்ச் சங்கத்தின் தேசியத் தலைவர் அன்பழகன் உட்பட மேலும் பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் சூப்பர் மைண்ட் டைனமிக்கின் தூணாக செயல்பட்டு வந்த ஆர்டிஎம் வி.ஆறுமுகத்திற்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

